ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று
EELAM TAMIL RIGHTS ASSEMBLY
tamilassembly.org

திருகோணமலை
*ஜூன் 05, 2026*

**ஊடக அறிக்கை**

***ஈழத்தமிழரின் கருத்துச் சுதந்திர உரிமையின் மீது நிகழ்த்தப்படும் அனைத்து அடக்குமுறைகளும் களையப்பட வேண்டும்.***

***கலைஞர் சங்கீத்சன் உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்!***

*சுயாதீன தமிழ் சொல்லிசைக் (ராப் -Rap) கலைஞர் சங்கீத்சன் கணேஸ்குமார் (Hiphop Sangee) அவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் அச்சட்டத்தைப் பிரயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ள சிறீலங்கா காவல்துறையினரால் தான்தோன்றித்தனமாகக் கைது செய்யப்பட்டு அதே சட்டத்தின் கீழ் காவல்துறையினரால் நீதிமன்றில் முன்நிலைப் படுத்தப்பட்டமை ஆகியவற்றை ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று (ETRA) மிக வன்மையாகக் கண்டிக்கிறது.*

*கடந்த மே 31 அன்று சாவகச்சேரி நாவற்குழி பகுதியில் நடைபெற்ற கலை நிகழ்வொன்றில் ஈழத் தமிழர் தாயகம் எதிர்கொண்டுள்ள களநிரவரங்களையும், அவர்தம் தாயக உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த பாடல் வரிகளை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார் என்று கூறப்படும் காரணத்திற்காக ஸ்ரீலங்கா காவல் துறை, அவர் மீதான இத்தகைய அடக்குமுறையை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் ஏவிவிட்டுள்ளது.*

*மனித உரிமைகளின் உலகப் பிரகடனம் (UDHR), சரத்து 19 இன் படி "ஒவ்வொருவருக்கும் கருத்தைக் கொண்டிருக்கும் உரிமையும், அதை வெளிப்படுத்தும் உரிமையும் உண்டு. இந்த உரிமையில், தலையீடு இன்றிக் கருத்துக்களைக் கொண்டிருப்பதும், எல்லைகளைப் பொருட்படுத்தாமல் எந்த ஊடகத்தின் மூலமாகவும் தகவல்களையும் கருத்துக்களையும் தேடிப் பெறுவதும், பெற்றுக்கொள்வதும், பரப்புவதும் அடங்கும்" என்று உலகத்தவர்க்கும், ஈழத்தமிழர்களாகிய எமக்கும் உரித்தாக்கப்பட்டுள்ள கூட்டுப் பண்பாட்டு வெளிப்பாட்டையும், கருத்துச் சுதந்திரத்தையும் நசுக்கும் ஒரு திட்டமிட்ட செயலாகவே இக் கைதை நாம் பார்க்கிறோம்.*

*ஒட்டுமொத்தமாக, அங்கீகாரம் அற்ற, சர்வதேச அங்கீகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சியும் அதன் அரச இறைமையின் பாற்பட்ட நில ஒருமைப்பாடும் ஈழத்தமிழர் தம் சுயநிர்ணய உரிமையையும் தாயகக் கோட்பாட்டையும் மறுதலிக்கும் நோக்கோடு பலவித சர்வதேசச் சட்டமீறல்களின் கருவிகளாக உள்ளன.*

*மனித உரிமைகளின் உலகப் பிரகடனம் என்பது உலகளாவிய ஒரு பிரகடனமாக உள்ளது என்பதால், அதை மீறுகின்ற குற்றத்தைச் சுட்டிக்காட்டும் அதேவேளை, சிறீலங்கா அரசானது நேரடியான சர்வதேசச் சட்ட வலுவைக் கொண்டுள்ள, தானும் ஒப்புக்கொண்டுள்ள ICCPR, ICESCR, ICERD, CAT, CED ஆகிய நேரடிச் சட்டவலுவுள்ள உடன்படிக்கைகளை மீறுகின்றது என்பதையும் மனித உரிமைகள், கூட்டு உரிமைகள் பற்றிப் பேசுவோர் கவனத்திற் கொள்ளவேண்டும்.*

*இவ்விவகாரம் தொடர்பாக ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்றாகிய (ETRA) நாம் பன்னாட்டுச் சமூகத்திற்கும், மனித உரிமை அமைப்புகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்குப் பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கடும் அழுத்தங்களை உடனடியாக முன்வைக்கவேண்டும் என நாம் வேண்டுகிறோம்.*

- ***உடனடி மற்றும் நிபந்தனையற்ற விடுதலை:***
  - ***கலைஞர் சங்கீத்சன் மீது சுமத்தப்பட்டுள்ள சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உடனடியாகத் திரும்பப் பெறப்பட்டு, அவர் முழுமையான சுதந்திரத்துடன் விடுவிக்கப்பட வேண்டும்.***

+94 77 767 0748
contact@tamilassembly.org
tamilassembly.org
No. 159A, 1/2, Sea View Road, Trincomalee

- ***பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்:***
    - **இச்சட்டம் காட்டுமிராண்டித்தனமானது என உலக மனித உரிமை அமைப்பகளால் அடையாளப் படுத்தப்பட்டு நீக்கப்படவேண்டும் என்ற பேரழுத்தம் எழுந்தபோது நாடாளுமன்றத் தேர்தல்களின் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் எனப் பிரசாரம் செய்த தற்போதைய அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, இன்று அதே கொடூரச் சட்டத்தைப் பயன்படுத்தித் தமிழ் இளைஞர்களையும் கலைஞர்களையும் இலக்கு வைப்பதன் மூலம் தனது இனவாதத்தை வெளிப்படுத்தியுள்ளது. இக்கொடூரச் சட்டம் முற்றிலும் நீக்கப்பட வேண்டும்.**

- ***கருத்துச் சுதந்திரமும் கலை வெளிப்பாட்டு உரிமையும்:***
    - **ஒரு சமூகத்தின் அவலங்களையும், வரலாற்றையும் கலை மற்றும் எழுத்து வடிவில் வெளிப் படுத்துவது எந்த வகையிலும் பயங்கரவாதச் செயலாகாது. எமது தாயகத்தில் தமிழ் கலைஞர்கள் அச்சமின்றித் தங்களின் கலைப் பணிகளைத் தொடர்வதற்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.**

- ***ஈழத் தமிழர்களின் மக்களாணை அற்று, அவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு, அவர்களின் அரசியல் வேணவாவை முற்றிலும் நிராகரிப்பது மட்டுமன்றி அதைத் தண்டனைக்குரிய குற்றமாகவும் ஆறாம் சட்டத்திருத்தம் மூலம் மாற்றியுள்ளது. இந்தக் காரணத்தால் பயங் கரவாத தடைச் சட்டம் மட்டுமன்றி, சாதரண தண்டனைச் சட்டத்தின் 120ஆம் உறுப்புரை தொடக்கம் ICCPR சட்டம் எனப்படும் சட்டம் வரை பல சட்டங்களின் உறுப்புரைகள் கலைப் படைப்பாளிகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் சூழல் நிலவுகிறது. எனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுமாறு தனித்துக் கோருவது போதாது என்பதையும், அவ்வாறு கோருவதை அரசியலமைப்பின் இதர தன்மைகளை ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்வதகப் பொருள்கோடல் செய்யப்படக் கூடாது என்பதையும் ஈழத்தமிழர் உரிமைகள் பெருமன்று உரிமை துறவாமை (Non-Waiver) என்ற அடிப்படையில் இத்தருணத்தில் நினை வூட்டுகிறது.***

*இந்த அநீதிக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் எதிர்வரும் ஜூன் 06 அன்று நடத்தும் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு எமது பெருமன்று முழுமையான ஆதரவை வழங்கு வதோடு, ஒட்டுமொத்த தமிழ் மக்களும், சிவில் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் பேதங்களைக் கடந்து இப்போராட்டத்தில் அணிதிரள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.*

*சனநாயக விழுமியங்களையும் கருத்துச் சுதந்திரத்தையும் மதிக்கின்ற பன்னாட்டுச் சமூகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் சிறீலங்கா அரசின் இந்த எதேச்சதிகாரப் போக்கிற்கு எதிராகத் தங்களின் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என ETRA மிக அவசரமாகக் கேட்டுக்கொள்கிறது.*

**இவ்வண்ணம்**

……………………………… ……..…………………………..

***கலாநிதி இராமநாதன் சிறீஞானேஸ்வரன்***
***இணைப்பாளர்***

***வனிதா சேனாதிராஜா***
***செயலாளர்***